இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 320 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 17 – புதன்கிழமை 01 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 320 : Thiruvalluvar Year - 2057 - Aani 17 - Wednesday 01 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## போதைப் பொருள் பயன்படுத்திய

# த.வெ.க. அமைச்சர் மீது சி.பி.ஐ. விசாரணை!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி ஜெ.வீரமணி ஜெயக்குமார் தலைமையில் மாணவரணி நிர்வாகிகள் சந்தித்து தமிழ்நாடு முழுவதும் கழக மாணவர் அணி சார்பில் தடையை மீறி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை விளக்கிக் கூறி வாழ்த்துப் பெற்றனர்.

## தி.மு.க. மாணவர் அணி வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 1 -**

**“போதைப் பொருள் பயன்படுத்தியது போல், “Thug Life Story” போட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமார் மீது சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும்” என்று தி.மு.க. மாணவரணி வலியுறுத்தியுள்ளது.**

தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்தே த.வெ.க. அமைச்சர்கள் ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் மோகத்தில் ஆங்காங்கே சென்று பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வருவது நாடே அறிந்த ஒன்றாகும்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஐபிஎல் போட்டியின் போது அமைச்சர் சரத்குமார் வெள்ளை நிற மாத்திரையை தூளாக்கும் பழைய வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலானது.

இப்படி பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய விவகாரத்தில் த.வெ.க. அமைச்சர் சரத்குமாரைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறையினர், திமுக மாணவரணியினர் பல்லாயிரக்கணக்கானோரை வலுக்கட்டாயமாக தடுத்துநிறுத்தி கைது செய்தனர்.

இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மாணவரணி செயலாளர் வீரமணி உள்ளிட்டோர் நேரில் சந்தித்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வீரமணி, தமிழ்நாட்டு இளைஞர்கள் தடம் மாறிவிடக்கூடாது என்பதற்காக கழக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாக கூறினார்.

இளைஞர்களுக்கு முன் உதாரணமாக திகழ வேண்டிய அமைச்சரே போதைப் பொருள் உபயோகிப்பது போல் வீடியோ வெளியிட்டுள்ளது கண்டனத்திற்குரியது என்றும், இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

### த.வெ.க. அரசில் சட்டம் - ஒழுங்கு படும்பாடு!

# தமிழ்நாட்டில் ஒரேநாளில் 12 பேர் கொலை!

## நாள்தோறும் குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு!

**சென்னை, ஜூலை 1 -**

**தமிழ்நாட்டில் ஒரேநாளில் 12 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ‘இது என்ன உத்தர பிரதேசமா?’ என மக்கள் கொந்தளித்துள்ளனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு :-

கன்னியாகுமரியில் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கண்ணம்பிவிளையில் மது அருந்தும் போது சிங்கம், லிங்கசாமி கொடூரமாக கொல்லப்பட்டார். நாகர்கோவில் அருகே கட்டுமான ஒப்பந்ததாரர் தங்கபாண்டி தலையில் கல்லை போட்டு தொழிலாளர் சரவணக்குமார் கொலை செய்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே 9 வயது சிறுவன் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஓரினச்சேர்க்கைக்கு இணங்க மறுத்த சிறுவனை கொலை செய்த 12ம் வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டார். தலைநகர் சென்னையில் மேடவாக்கம் அருகே ஆட்டோ ஓட்டுநர் சுரேஷ், அவரது ஆட்டோவிலேயே மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தார். செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் அருகே ஒடிசாவை சேர்ந்த இளைஞர் முஸ்தாக்ஜ வீடு புகுந்து, அடையாளம் தெரியாத கும்பல் கொலை செய்துள்ளது.

காரைக்குடி புது பேருந்து நிலையத்தில் மணிகண்டன் என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், சோழவந்தானில் சித்திக் என்ற இளைஞரை, அடையாளம் தெரியாத கும்பல் வழிமறித்து படுகொலை செய்தது.

ஏற்கனவே கொலை வழக்கில் சிக்கிய சித்திக்கை பழிவாங்கும் விதமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலையில் நிலத்தகராறில் துலுக்கானத்தை, அவரது அண்ணன் மகன் மற்றும் அவரது உறவினர்கள் தாக்கி கொலை செய்துள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை அருகே குடும்ப தகராறில் தந்தை ராமசாமியை, மகனே அடித்து கொன்றுள்ளார். பழனி அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக தங்கையின் கணவர் துர்கைராஜை, மைத்துனரே தலையில் கல்லைப் போட்டு கொலை செய்துள்ளார்.

கிருஷ்ணகிரி அருகே மல்லிகைபாய் தொட்டி கிராமத்தில் குடும்பத் தகராறில் மனைவி சுஷ்மிதாவை கணவரே கொலை செய்துள்ளார். இதன் மூலம் ஒரேநாளில் மட்டும் 12 படுகொலைகள் தமிழ்நாடு முழுவதும் அரங்கேறியுள்ளன.

# சென்னையில் ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு!

## பொதுமக்கள் பாதிப்பு!

சென்னை, ஜூலை 1 -

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்தது முதல் ஆவின் பாலுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு அதிக உற்பத்தி செலவின் காரணமாக ஆவின் கிரீன் மேஜிக் பால் பாக்கெட்டுகளின் உற்பத்தியை விஜய் அரசு படிப்படியாக குறைத்தது.

தற்போது அனைத்து நிற பாக்கெட்டைகளின் உற்பத்தியை குறைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆரஞ்சு, பச்சை, நீலம், பிங்க் நிற பால் பாக்கெட்களின் உற்பத்தியை ஆவின் நிறுவனம் குறைத்துள்ளதால் சென்னை முழுவதும் ஆவின் பால் தட்டுப்பாடு பூதாகரமாக வெடித்துள்ளது.

ஆவின் பால் கடைகளுக்கு விநியோகம் செய்யப்படும் தினசரி பால்பாக்கெட் எண்ணிக்கை 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைந்ததால் கடைகளில் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த ஏப்ரல் மாதத்தின்போது சுமார் 16 லட்சம் லிட்டராக இருந்த ஆவின் பாலின் தினசரி விநியோகம், தற்போது பதின்மூன்றரை லட்சம் லிட்டராகக் குறைந்துள்ளது பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சென்னையில் மட்டும் தினசரி 2.5 லட்சம் லிட்டர் பால் விநியோகம் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரம்:

# த.வெ.க. அரசைக் கண்டித்து விவசாயிகள் உண்ணாவிரதம்!

## சென்னையில் திரண்டனர்!

சென்னை, ஜூலை 1 -

விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரத்தில் மோசடி செய்த த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில் விவசாயிகள் திரண்டு வந்து உண்ணாவிரத போராட்டம் பாடை கட்டி, சடலமாக படுத்து, ஒப்பாரி வைத்து நூதன போராட்டம் நடத்தி மோசடி செய்த த.வெ.க. அரசை கண்டித்து விவசாயிகள் கண்டன முழக்கமிட்டனர்.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதமும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும் நிலத்தின் அடிப்படையில் வேளாண் கடனை தள்ளுபடி செய்திட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், விவசாய கடன் தள்ளுபடி விவகாரத்தில் த.வெ.க. அரசு மோசடி செய்துள்ளதாக விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனை கண்டித்தும், நெல் குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்து, செப்டம்பர் 1 முதல் கொள்முதல் செய்ய வலியுறுத்தியும், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே விவசாயிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெற்று வரும் இந்த போராட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். பாடை கட்டி, அதில் சடலம் போல் படுத்து, ஒப்பாரி வைத்து த.வெ.க. அரசுக்கு எதிராக நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### வாக்காளர் பட்டியல்:

# சிறப்பு தீவிரத் திருத்தத்துக்கு எதிர்ப்பு!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 1–

எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும், நீக்கும் திட்டத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளனர்.

தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர்., பணிகள் மூலம் தங்களுக்கு ஆதரவான வாக்காளர்களை அதிகளவில் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதும், அதே நேரத்தில் தங்களுக்கு எதிரான பெண்கள் மற்றும் சிறு பான்மையினர் உள்ளிட்ட வாக்காளர்களின் பெயர்களை நீக்குவதும் என தேர்தல் ஆணையம் மூலம் ஒன்றிய பா.ஜ.க., அரசு தில்லுமுல்லுகளை அரங்கேற்றி வருகிறது. இதற்கு நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் தொடர்ந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், திமுக, சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் SIR திட்டத்தின் மூலம் ஏற்படும் பாதிப்புகள் குறித்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரிய காந்துக்கு கடிதம் எழுதி உள்ளனர். ஏற்கனவே பீகார் SIR வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், SIR அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் மீண்டும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளனர். இதனிடையே பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் டெல்லியில் SIR பணிகள் தொடங்கி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.